வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 07/10/2023 | முதல் | 11/10/2023 |
| அறிக்கை எண் : | 080/ 2023 | வெளியீட்டு நாள் : | 06/10/2023 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

**பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது**

| கடந்தவார வானிலை (01.10.2023 முதல் 05.10.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –11-10-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/10 | 02/10 | 03/10 | 04/10 | 05/10 | தேதி | நாள்-1 07/10 | நாள்-2 08/10 | நாள்-3 09/10 | நாள்-4 10/10 | நாள்-5 11/10 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 5 | 5 | 15 | 25 | 18 |
| 35 | 35 | 35 | 39 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 36 | 36 |
| 26 | 25 | 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 23 | 23 | 23 |
| 6 | 3 | 3 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 8 | 8 | 8 |
| 75 | 66 | 63 | 68 | 63 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 78 | 78 |
| 51 | 49 | 54 | 44 | 54 | | 64 | 64 | 64 | 60 | 60 |
| 10 | 8 | 4 | 12 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 8 | 8 |
| தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

### குறுஞ்செய்தி :

**மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அக்டோபர் 7, 8 தேதி லேசான மழையும் மற்றும் 9, 10, 11ம் தேதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.**

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கப்பட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (06- 1 அக்டோபர் 2023):**

### மழைப்பொழிவு :

06-10-2023 - 12-10-2023: **நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.**

**13-10-2023 - 19-10-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.**

**அதிகபட்ச வெப்பநிலை :**

**06-10-2023 - 19-10-2023: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.**

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

**06-10-2023 - 12-10-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட அதிகரித்து காணப்படும். 18° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.**

**13-10-2023 - 19-10-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு**

**அடுத்த சில நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும் மேலும் இந்த காலகட்டத்தில் உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கவும்.**

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பயறுவகை பயிர்கள், கத்தரி, கால்நடை**

**பயறுவகை பயிர்கள்:**

**தற்போது நிலவும் பருவநிலையில் பயறுவகைப் பயிர்களில் வேர் அழுகல் நோய் பரவலாக தென்படுகின்றது. பாதிக்கப்பட்ட இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, பழுப்பு நிறக்கோடுகளை ஏற்படுத்தி பின் பழுப்பு நிறக்கோடுகள் சேர்ந்து, பெரிய அழுகல் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி இலைகள் முதிர்வதற்கு முன் உதிர்ந்து விடுகின்றன.**

**வேர் மற்றும் வேரின் அடிப்பாகத்தில் கருப்பு நிறத் தோற்றமும், பட்டைகள் உரிந்தும் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட செடியின் வேரை பிளந்து பார்த்தால், சிவப்பு நிற தோற்றமும் உள்திசுக்கள் அழுகியும் காணப்படும்.**

**இதனைக் கட்டுப்படுத்த 2.5 கிலோ சூடோமோனஸ் ஃப்ளூரோசன்ஸ் அல்லது 2.5 கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடி இவற்றுடன் 50 கிலோ மக்கிய தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்து வயலில் இடலாம்.**

**மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 25மிலி என்ற அளவில் அசாக்சிஸ்ட்ரோபின் மருந்தினை கலந்து பாதிக்கப்பட்ட பயிரின் வேர்பகுதியில் ஊற்றி கட்டுப்படுத்தலாம்.**

**கத்தரி:**

**தற்போதைய சூழ்நிலையில் கத்தரியில் வளர்ச்சி ஊக்கி தெளிப்பது நல்லபலனை அளிக்கும்.**

போராக்ஸ் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீருடன் கலந்து நாற்று நட்ட 15 நாட்கள் கழித்து ஒரு முறையும், பிறகு பூக்கள் தோன்றும் பருவத்தில் ஒரு முறையும் தெளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

**கால்நடை:**

தற்போது ஆங்காங்கே மழை பெய்துள்ளது. மேலும் மழை தொடர்ந்து எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் ஈரப்பதம் காரணமாக வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணம் உருவாக வாய்ப்பு உள்ளது.

ஆகையால் விவசாயிகள் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்குதலில் இருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.